10.3.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கொல்லிமலையில் இலவச இடுபொருள்கள் வழங்கல்

இந்திய வேளாண் அறிவியல் கழகத்தின் சார்பில் இலவச நாட்டுக்கோழி மற்றும் இடுபொருள்கள், கோழி வளர்ப்புக் கூண்டு வழங்கும் விழா கொல்லிமலை வாழவந்திநாடு, பெருங்கிராய்பட்டியில் வியாழக்கிழமை நடைபெற்றது. நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் துரைசாமி தலைமை வகித்து, பயனாளிகளுக்கு இலவச நாட்டுக்கோழி மற்றும் இடுபொருள்கள், கோழி வளர்ப்புக் கூண்டுகளை வழங்கினார். கொல்லிமலை ஒன்றியத் தலைவர் சி.சந்திரசேகரன், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி கால்நடை உற்பத்தி மற்றும் மேலாண்மைத்துறை பேராசிரியர் ரமேஷ் சரவணகுமார், கல்வியியல் துறை பேராசிரியர் செல்வராஜ், கொல்லிமலை ஒன்றிய துணைத் தலைவர் மாதேஸ்வரி ஆகியோர் பங்கேற்றனர். 71 பயனாளிகளுக்கு நாட்டுக்கோழி மற்றும் இடுபொருள்கள், கோழி வளர்ப்புக் கூண்டுகள் வழங்கப்பட்டன. உதவிப் பேராசிரியர் சரவணன் நன்றி கூறினார்.

### சாத்தூர் பகுதியில் பலத்த மழை

சாத்தூரில் வியாழக்கிழமை பலத்த மழை பெய்தது. இதனால், அனல்காற்று வீசி வந்த சாத்தூர்ப் பகுதியில் இதமான சூழல் காணப்பட்டது. சாத்தூர் பகுதியில் கடந்த சில நாள்களாக கடும் வெயிலால் அனல் காற்று வீசியது. பகல் நேரங்களில் வெளியே நடமாடுவதற்கு பொதுமக்கள் பெரிதும் சிரமப்பட்டு வந்தனர். இந்நிலையில் வியாழக்கிழமை காலையில் மேகமூட்டம் காணப்பட்டது.

பகல் முழுவதும் வெயில் குறைந்து மழைக்கான அறிகுறிகள் தென்பட்டன. பிற்பகல் 3 மணிக்கு சாத்தூர் பகுதியில் பலத்த மழை பெய்தது. அரை மணி நேரம் பெய்த மழையால் சாலைகளில் வெள்ளம் போல் தண்ணீர் ஓடியது. தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. சாத்தூர் பிரதானச் சாலை, நீதிமன்றம் பகுதி, புறவழிச்சாலை உள்ளிட்ட பகுதிகளில் தண்ணீர் குளம் போல் தேங்கியது. சாலைகளில் வாகனங் களை ஓட்டிச் செல்வதற்கு வாகன ஓட்டிகள் பெரிதும் சிரமப்பட்டனர். அனல்காற்று வீசிவந்த சாத்தூர்ப் பகுதியில் வியாழக்கிழமை மாலை முதல் இதமான சூழல் காணப்பட்டது. சிவகாசியில்: சிவகாசி, ஏப். 9: சிவகாசியில் பரவலாக வியாழக்கிழமை மழை பெய்தது. பிற்பகல் சுமார் 2.55 மணி முதல் மாலை 3.15 மணி வரை மழை பெய்தது. இதனால் அனல் காற்று வீசிய சிவகாசி பகுதியில் குளிர்ச்சியான சூழல் காணப்படுகின்றது.

## <u>திருவட்டாறு விவசாயிகளுக்கு 50% மானிய விலையில் தக்கைப் பூண்டு விதைகள்</u>

திருவட்டாறு வட்டார விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் தக்கைப் பூண்டு விதைகள் விநியோகம் செய்யப்படுவதாக திருவட்டாறு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் எம். ஜெயக்குமார் தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தக்கைப்பூண்டு என்பது தண்டுப் பகுதியில் முடிச்சு உள்ள பசுந்தாள் உரப் பயிராகும். இது விரைவாக வளரக்கூடிய தன்மை கொண்டது. உப்புத் தன்மை மற்றும் நீர்த் தேங்கிய நிலங்களில் விரைவாக வளரும்.பசுந்தாள் உரம் மண்ணின் அமைப்பை மேம்படுத்தி மண்வளத்தைப் பாதுகாத்து மண்ணின் நீர்ப்பிடிப்புத் தன்மையை அதிகப்படுத்தி மண் அரிப்பினால் ஏற்படும் இழப்பைக் குறைக்கும். மேலும், மண்ணில் தழைச் சத்து, சாம்பல் சத்து, மணிச்சத்து ஆகியவற்றையும் அதிகரிக்கும். இது ஒரு ஏக்கருக்கு 16 கிலோ போதுமானது. 45 முதல் 60 நாள்களில் மடக்கி உழ வேண்டும்.

தற்போது தொழு உரங்கள் அதிகமாகக் கிடைப்பதில்லை. மேலும் அவற்றின் விலைகளும் அதிகம். இதற்கு மாறாக பசுந்தாள் உரங்களைப் பயன்படுத்தி அதிக லாபம் பெறலாம். மண்ணில் மடக்கி உழவு செய்யப் பட்ட பசுந்தாள் உரம் தொழுஉரத்துக்கு மாற்றாகச் செயல்பட்டு மண்ணுக்கு அதிக சத்துக்களைக் கொடுக்கும். பூ பூப்பதற்கு முன்பாக மண்ணில் மடக்கி உழவு செய்ய வேண்டும். தென்னந்தோப்புகளில் தக்கைப் பூண்டு விதைகளை விதைத்து அவற்றை மடக்கி உழுது மண்ணின் வளத்தைப் பாதுகாக்கலாம். திருவட்டாறு வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் தக்கைப்பூண்டு விதைகள் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது. விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாயிகளுக்கு கெஜ்ரிவால் நிவாரணம்

புதுடில்லி : மழையால் பாதிக்கப்பட்ட டில்லி விவசாயிகளுக்கு, டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் ஏப்ரல் 11ம் தேதி நடைபெற உள்ள பொதுக் கூட்டத்தின் போது நிவாரணம் அறிவிக்கலாம் என டில்லி மூத்த அரசு அதிகாரி தெரிவித்துள்ளார். இந்த கூட்டத்தின் போது விவசாயி களுக்கான கொள்கைகள் குறித்தும் கெஜ்ரிவால் விவரிப்பார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீவைகுண்டம் அணையை தூர் வாற சென்னை பசுமை தீர்ப்பாயம் உத்தரவு

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்டம் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஸ்ரீவைகுண்டம் தடுப்பணையை, தூர்வாறக்கோரி ம.தி.மு.க., மாவட்ட செயலாளர் ஜோயல் பசுமை தீர்ப்பாயத்தில்

தொடர்ந்த வழக்கில், தூர் வாற நடவடிக்கை எடுக்க கலெக்டர் ரவிக்குமாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மணல் மேவிய அணை : தாமிரபரணி ஆற்றின் குறுக்கே 1869 ம் ஆண்டு ஆங்கிலேய அரசின் பக்கிள்துரையால் 8 அடி ஆழத்தில் தடுப்பணை அமைக்கப்பட்டது. வடகால், தென்கால் வழியாக 25 ஆயிரத்து 560 ஏக்கர் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது இதனை நம்பி ஆயிரக்கணக்கான விவசாயிகள் பயன் பெற்று வருகின்றனர். அணை கட்டப்பட்டு 145 ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டது. முறையான பராமரிப்பு இல்லாமல், மணல் மேவி மேடாக மாறி விட்டது. மழைக்காலங்களில் தண்ணீர் தேக்கமுடியாமல் ஆண்டுக்கு 15முதல் 25 டி.எம்.சி., தண்ணீர் வீணாக கடலில் கலந்து வருகிறது. நடவடிக்கை இல்லை:2014 ம் ஆண்டு கலெக்டர் ரவிக்குமார் 4.44 கோடி ரூபாய் செலவில் அணை தூர்வாறப்படும், என அறிவித்தார். "வனத்துறையினர் தங்களிடம் அனுமதி பெறவில்லை,' என தெரிவித்தது, மீண்டும் 2014 ஜூன் 20 ல், மீண்டும் கலெக்டர் ரவிக்குமார் வனத்துறை அனமதி பெறப்பட்டு விட்டது. திட்டமதிப்பீடு செய்து, ஒப்புதல் வழங்கப்பட்டு விட்டது, 10 நாட்களில் பணிகள் துவங்கும், என அறிவித்தார். 10 மாதங்களாகியும், இன்று வரை அணை தூர் வாறப்படவில்லை. ம.தி.மு.க., வழக்கு: ஸ்ரீவைகுண்டம் தடுப்பணையை தூர் வாற வேண்டும். 2015 ஏப்., மே மாதம் வறட்சியான காலம், இந்த காலங்களில் மட்டுமே அணையை தூர் வாற முடியும், இதற்கு உத்தரவிடக்கோரி ம.தி.மு.க., மாவட்ட செயலாளர் ஜோயல், சென்னை பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு நேற்று( ஏப்.,9) நீதியரசர்கள் ஜோதிமணி, ஆர்.நாகேந்திரன் முன்பு விசாரணைக்கு வந்தது. இவ் வழக்கில் ஒரு வார காலத்திற்குள் தேவையான ஆவணங்களை வனத்துறை, சுற்றுச்சூழல் துறை அனுமதிக்கு கலெக்டர் வழங்க வேண்டும். ஏப்., 30 க்குள் அணையை தூர் வாற நடவடிக்கைகள் எடுத்து உத்திரவிட வேண்டும். அன்றே பசுமை தீர்ப்பாயத்தில் கலெக்டர்

அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும், என உத்தரவிட்டுள்ளது. விடிவு காலம்: ஸ்ரீவைகுண்டம் தடுப்பணை நீண்டகாலமாக தூர் வாற விவசாயிகள் கோரிக்கை விடுத்த நிலையில், அணை துர்வாற வனத்துறை, சுற்றுசுழல் துறை, தொல்லியல் துறைகளின் அனுமதியில்லாமல் தாமதமாகி வந்தது. தற்போது பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவால் அணையை தூர் வாற விடிவு காலம் பிறந்துள்ளது.

**புதிய கால்நடை மருத்துவமனை திறப்பு**

துறையூர்: துறையூர் அருகே நடுவலூரில் புதிதாக கட்டப்பட்ட கால்நடை மருத்துவமனை திறப்பு விழா நடந்தது. விழாவிற்கு, திருச்சி மாவட்ட கலெக்டர் பழனிச்சாமி, தலைமைவகித்தார். அமைச்சர் பூனாட்சி, கலந்துகொண்டு மருத்துவமனையை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கினார். விழாவில் எம்.எல்.ஏ., இந்திராகாந்தி, கால்நடை துறை திருச்சி மண்டல இணை இயக்குநர் செல்லசாமி, பஞ்சாயத்து தலைவர் மோகன், மாவட்ட பஞ்., தலைவர் ராஜாத்தி, உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**தாண்டிக்குடியில் கனமழை**

தாண்டிக்குடி : கொடைக்கானல், தாண்டிக்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மலைப்பகுதியில் நேற்று மாலை பரவலாக கனமழை பெய்தது. கடந்த சில வாரங்களாக சுட்டெரிக்கும் கோடை வெயிலால் மலைப்பகுதியினர் அவதியுற்றனர். தொடர்ந்து பனியின் தாக்கம் அதிகரித்து வறண்ட வானிலை நீடித்தது. ஆறு, கிணறு, குளம் ஆகியவை வறண்டு, நிலத்தடி நீர்மட்டமும் அதால பாதாளத்திற்கு சென்றது. விவசாய பாசனத்திற்கு தண்ணீரின்றி விவசாயிகள் பாதித்தனர். இந்நிலையில் நேற்று மாலை 4 மணிக்கு இடியுடன் பலத்த மழை பெய்தது. தாண்டிக்குடி, பண்ணைக்காடு, மங்களம்கொம்பு, பெரும் பாறை, தடியன்குடிசை மற்றும் சுற்று வட்டார பகுதியில் ஒருமணி நேரம் மழை பெய்தது. இந்த மழை காபி, மிளகு, மலை வாழை, ஆரஞ்சு

ஆகியவற்றிற்கு ஏற்றது என விவசாயிகள் தெரிவித்தனர். மேலும் குறுவிவசாய பயிர்களான அவரை, பீன்ஸ், சவ்சவ் ஆகியவற்றிற்கும் தக்க தருணத்தில் மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். இதையொட்டி தாண்டிக்குடி பகுதியில் மின் தடை ஏற்பட்டது.

## <u>எலுமிச்சை விலை: நூறு சதவீதம் உயர்வு</u>

தாண்டிக்குடி : தாண்டிக்குடி மலைப்பகுதியில் வரத்து குறைவால் எலுமிச்சை விலை உயர்ந்துள்ளது. மஞ்சள்பரப்பு, புல்லாவெளி, மீனாட்சி ஊத்து, வெள்ளரிக்கரை பகுதியில் எலுமிச்சை அதிகளவு சாகுபடி யாகிறது. நடப்பாண்டில் போதிய மழையின்றி வறட்சியால் திரட்சியான காய்களின்றி சிறுத்தும், மகசூல் வெகுவாக குறைந்தது. இந்நிலையில் மஞ்சள்பரப்பு மார்க்கெட்டில் கடந்த மாதம் 50 கிலோ மூடை ரூ.ஆயிரம் முதல் ஆயிரத்து 500 விற்ற நிலையில் தற்போது வரத்துக் குறைவால் ஒரு மூடை ரூ.3 ஆயிரத்திற்கு விற்பனையாகிறது. தொடர்ந்து மழை பெய்தால் மட்டுமே எலுமிச்சை வரத்து அதிகரிக்கும் நிலை உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## <u>விளைச்சல் அதிகரிப்பு மல்லி விலை சரிவு</u>

லாலாபேட்டை: கிருஷ்ணராயபுரம் தாலுகா பகுதியில் மல்லிகை பூ விளைச்சல் அதிகரிப்பால், விலை வீழ்ச்சியடைந்துள்ளது. கிருஷ்ணராய புரம் தாலுகாவுக்குட்பட்ட பகுதிகளான திருக்காம்புலியூர், சேங்கல், முனையனூர், கோவக்குளம், மாயனூர், மலைபட்டி, தாளியாம்பட்டி ஆகிய பகுதியில் பரவலாக மல்லிகை சாகுபடி பயிரிடப்பட்டுள்ளது. தோட்டத்தில் அறுவடை செய்யப்படும் மல்லிகை பூ, நேரடியாக வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். மல்லிகை பூ விளைச்சல் அதிகரித்துள்ளதால், கிலோ, 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. சில்லரை விற்பனையாக லாலாபேட்டை, மணவாசி, உள்ளூர் சந்தை மற்றும் திருவிழாவில் பூ கட்டப்பட்டு, பாக்கெட் ஒன்று, 10 ரூபாய்க்கு

விற்கப்படுகிறது. பூ விளைச்சல் தொடர்ந்து அதிகரிப்பு காரணமாக, விலை குறைந்துள்ளது.

## கால்நடைகளுக்கு வாய்காணை தடுப்பூசி

தேனி : தேனி மாவட்டத்தில் 96 ஆயிரம் மாடுகளுக்கு வாய்காணை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. மண்டல கால்நடை இணை இயக்குனர் தனசேகரன் கூறியதாவது: கடந்த ஆண்டு தமிழகத்தில் பசு மற்றும் எருமை மாடுகள் பால்வாய்க்காணை நோய் ஏற்பட்டு இறந்தன.இந்த நோய் பாதித்த மாடுகள் வாயில் எச்சில் வடிதல், கால்,மடு, வாய் பகுதிகளில் புண்கள் ஏற்படும். மாடுகளுக்கு அதிக காய்ச்சல் ஏற்படும். காய்ச்சல் தொடர்ந்து இருந்தால் இறப்பு கூட ஏற்படும். இந்த நோயை கட்டுப்படுத்த கால்நடை துறை மூலம் இலவச தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டன. தேனி மாவட்டத்தில் பால்வாய்க்காணை நோய்க்கு எப்.எம்.டி., எனும் தடுப்பூசியினை 96,282 கால்நடைகளுக்கு செலுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. பிறந்த நான்கு மாதம் ஆன கன்றுகள், சினை மாடுகளை தவிர்த்து மற்ற மாடுகளுக்கு தடுப்பூசி செலுத்தி நூறு சதவீத இலக்கை எட்டியுள்ளோம், என்றார்

## 71 கொல்லிமலை பயனாளிகளுக்கு விலையில்லா நாட்டு கோழி வழங்கல்

நாமக்கல் : கொல்லிமலையை சேர்ந்த, 71 பயனாளிகளுக்கு, விலையில்லா நாட்டுக்கோழி, கூண்டு மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டது. நாமக்கல் அடுத்த கொல்லிமலை யூனியன், வாழவந்திநாடு பஞ்சாயத்துக்கு உட்பட்ட, பெருங்கிராய்பட்டியில், மத்திய அரசின் இந்திய வேளாண் அறிவியல் கழகத்தின் சார்பில், விலையில்லா நாட்டுக்கோழி, கோழிக்கூண்டு மற்றும் இடுபொருட்கள் வழங்கும் விழா நடந்தது.யூனியன் சேர்மன் சந்திரசேகரன், கால்நடை மருத்துவக் கல்லூரி கால்நடை உற்பத்தி மற்றும் மேலாண் துறை பேராசிரியர் ரமேஷ்

சரவணகுமார், கல்வியியல் துறை பேராசிரியர் செல்வராஜ், யூனியன் துணைத் தலைவர் மாதேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் துரைசாமி பேசியதாவது:ஏற்காடு மலை பகுதியை சேர்ந்தவர்களுக்கு, இதுபோன்ற விலையில்லா நாட்டுக்கோழி வழங்கப்பட்டது. அவற்றை மகளிர் சுயஉதவிக் குழுவினர் பெற்று, கோழிகள் மற்றும் முட்டை வியாபாரம் மேற்கொண்டு வருவாய் ஈட்டுகின்றனர். தற்போது, கொல்லிமலை மலைவாழ் மக்களுக்கு விலையில்லா நாட்டுக் கோழி வழங்கப்பட்டுள்ளது.மேலும், பெருச்சாளி, காட்டுபூனை போன்ற விலங்குகளிடம் இருந்து அவற்றை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக, கோழிகளை வளர்ப்பதற்கு கூண்டும் வழங்கப்பட்டுள்ளது. மலைபகுதியை சேர்ந்த குழந்தைகள் நன்றாக படிக்கவில்லை என குறை சொல்லாதீர்கள். குழந்தைகளுக்கு தினமும், அரை முட்டையும், வயதானவர்களுக்கு, ஒரு டம்ளர் பாலும் வழங்க வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.விழாவில், 71 பயனாளிகளுக்கு விலையில்லா நாட்டுக் கோழி, கூண்டு மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டது.

## சாத்தூரில் கோடை மழை

சாத்தூர் : சாத்தூரில் நேற்று பிற்பகல் 2மணி முதல் மாலை 3.40 மணி வரை இடி, மின்னலுடன் கோடை மழை பெய்தது. வெப்பத்தால் இரவில் தூக்கத்தை தொலைத்த மக்களுக்கு நேற்றைய பகலில் பெய்த மழை ஆறுதல் தந்தது. மெயின்ரோட்டின் தாழ்வான பகுதிகளிலும் மழைநீர் தேங்கியது. பைபாஸ் சர்வீஸ்ரோட்டில் மழைநீர் வடிந்து செல்ல வழியின்றி தேங்கி நின்றதால் பாதசாரிகள் அவதிக்குள்ளாகினர். நகராட்சி துப்புரவுபணியாளர்கள் வாறுகால்களில் இருந்த அடைப்புகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

## <u>வனஅலுவலர் சங்க கூட்டம்</u>

ராஜபாளையம் : ராஜபாளையத்தில் தமிழ்நாடு வனஅலுலர்கள் சங்க பொதுக்குழு கூட்டம் நடந்தது. ரேஞ்சர் பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். பாரஸ்டர் முத்துகூடலிங்கம் வரவேற்றார். மாநில கொள்கை பரப்பு செயலாளர் செல்லத்துரை பேசுகையில், "சவாலாக பணிகளை மேற்கொள்கிறோம். ஆள்பற்றாக்குறையால் தங்களது பதவிக்கேற்ப பணிச்சுமை அதிகரிக்கிறது. ஊழியர்கள் பிரச்னை குறித்து சங்கம் சார்பில் உயர்அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. இதன் மூலம் தீர்வு கிடைக்க வழி ஏற்படுகிறது," என்றார்.

# தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>விளைச்சல் பாதிப்பால் தேங்காய் விலை உயர்வு</u>

சேலம், : தமிழகத்தில் எதிர்பார்த்த அளவு மழை இல்லாததால் தென்னை மரங்களுக்கு போதிய தண்ணீர் இல்லை. இதனால் தமிழகம் முழுவதும் பல்லாயிரக் கணக்கான தென்னை மரங்கள் பட்டுபோனது. இதன் காரணமாக பரவலமாக தேங்காய் விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் மார்க்கெட்டுக்கு குறைந்தளவே தேங்காய் விற்பனைக்கு வருவதால் விலை உயர்ந்துள்ளது. கடந்த சில மாதங்களாக 3 சிறிய தேங்காய் கொண்ட ஒரு கூறு ரூ20 எனவும், 5 சிறிய தேங்காய் கொண்ட கூறு ரூ40 எனவும் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் அளவை பொறுத்து ஒரு தேங்காய் ரூ12 முதல் ரூ22 வரை விற்பனை செய்யப்படுகிறது.

## வரத்து அதிகரித்ததால் பப்பாளி விலை சரிவு

சேலம், : சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான கல்லாநத்தம், அம்மன்பாளையம், மணிவிழுந்தான் காலனி, ஆறகளூர், பைத்தூர், தாண்டவராயபுரம் ஆகிய பகுதிகளில் சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் பப்பாளி பயிரிடப்பட்டுள்ளது. அங்கு அறுவடை செய்யப்படும் பப்பாளி பழங்கள், சேலம் வஉசி மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்பட்டு, அண்டை மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. வழக்கமாக அக்டோபர் மாதம் முதல் ஜூன் மாதம் வரை பப்பாளி பழத்தின் வரத்து அதிகரித்து சீசன் களை கட்டும். தற்போது சீசன் களைகட்டியுள்ளதால், சேலம் மார்க்கெட்டுக்கு வரத்து அதிகரித்துள்ளது. கடந்த மாதங்களில் சேலம் மார்க்கெட்டுகளுக்கு வாரம் ஒரு முறை, 6 டன் முதல் 8 டன் வரை பப்பாளி வரத்து இருந்தது. தற்போது 12 டன் அளவிற்கு அதிகரித்துள்ளது. இதனால் ஒரு கிலோ ரூ20 முதல் 30 வரை விற்பனை செய்யப்பட்ட பப்பாளி, தற்போது கிலோ ரூ10க்கு விற்பனை செய்யப்படுகிறது. வரும் வாரங்களில் வரத்து மேலும் அதிகரித்தால், விலை சரிய வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## தளியில் அமைக்கப்பட்டு வரும் கொய்மலர் சாகுபடி ஆய்வு மையம் 4 மாதத்தில் பயன்பாட்டிற்கு வரும்

தேன்கனிக்கோட்டை. : கிருஷ்ணகிரி மாவட்டம் தளி அருகே நெல்லுமார் கூட்டூர் பகுதியில் இஸ்ரேல் நாட்டு தொழில்நுட்பத்தில் கொய் மலர் சாகுபடி ஆய்வு மை யம் அமைக்கப்பட்டு வரு கிறது. இதனை நேற்று இஸ் ரேல் தூதர் டேனில் கார் மோ நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், தோட்டக்கலைத் துறை கூட்டரங்கில் நடை பெற்ற கூட்டத்தில் பங்கேற்று மாவட்ட கலெக்டர் ராஜேஷ் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோ சனை நடத்தினார். அப்போது, அவர்

பேசியதாவது:இஸ்ரேல் தொழில்நுட்பத்துடன் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் தோட்டக்கலை பயிர்களுக்கான மகத்துவ மையங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. குறைந்த நீர்பாசனத்தில் அதிக மகசூல் தரக்கூடிய தொழில்நுட்பத்துடன் பழங்கள், காய்கறிகள், மலர்கள் போன்ற பயிர்களை சாகுபடி செய்வதற்கான 29 ஆய்வு மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் 15 மையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. 5 மையங்கள் முழுமையாக செயல்பட்டு வருகிறது. 10 மையங்கள் விரைவில் துவங்கும் நிலையில் உள்ளது. தளியில் அமைக்கப்பட்டு வரும் ஆய்வு மையத்தின் பணிகள் 13 நாட்களில் முடியும் தருவாயில் உள்ளது. இப்பணிகள் முடிந்த பிறகு 3 அல்லது 4 மாதங்களில் பயன்பாட்டிற்கு வரும். இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில் சப்கலெக்டர் செந்தில் ராஜ், கவுன்சிலர் ஜெனரல் சிமெவாகிம் கானாபி, துணை முதன்மை ஆலோ சகர் ஷிவ் ஷாலிவ், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் சென்னை ராஜாமுகமது, செயற்பொறி யாளர் பாண்டியன் (சென்னை) அண்ணாமலை தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் (பொ), உதவி இயக்குநர்கள் சீனி வாசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## <u>உழவர் உழைப்பாளர் சங்க நிர்வாகிகள் கூட்டம்</u>

ஈரோடு, : உழவர் உழைப்பாளர் சங்கம் சார்பில் மாநில மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நேற்று ஈரோடு கட்டிட பொருட்கள் சங்க வளாகத்தில் நடந்தது. கூட்டத்திற்கு மாநில பொருளாளர் சோமசுந்தரம் வரவேற்றார். மாநில செய்தி தொடர்பாளர் செந்தில்குமார், மாநில தலைமை நிலைய செயலாளர் ஜெயகுமார் முன்னிலை வகித்தனர். நிறுவனத்தலைவர் பொங்கலூர் மணிகண்டன் தலைமை வகித்து பேசினார். பின்னர் செய்தியாளர்களிடம் பொங்கலூர் மணிகண்டன் பேசியதாவது: மத்திய அரசின் நிலம் மீட்பு சட்ட மசோதாவை வாபஸ் பெற வலியுறுத்தி தமிழகம் முழுவதும் விவசாயிகளிடையே எழுச்சியை

ஏற்படுத்தும் வகையில் ஏப்ரல் 28 முதல் ஈரோட்டில் இருந்து துவங்கி 1000 வாகனங்களில் தமிழகம் முழுவதும் 32 மாவட்டங்களில் வாகனப்பேரணி நடத்தவும், ஜூன் 19ல் உழவர் போராட்ட தியாகிகள் தினத்தையொட்டி அன்னாஹசாரே தலைமையில் டெல்டா மாவட்டங்களான தஞ்சை, திருச்சி மற்றும் மதுரையில் விவசாயிகள் மாநாட்டை நடத்தவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நிலம் மீட்டு இயக்கத்தை மீண்டும் அவசர சட்டமாககொண்டு வந்த மத்திய அரசை வன்மையாக கண்டிக்கிறோம். இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பிறந்தநாளான ஏப்ரல் 9ம் தேதியை இயற்கை உழவர் தினமாக அறிவிக்க வேண்டும். ரசாயன உரங்களால் மலடாகி போன நிலங்களை மேம்படுத்த இயற்கை விவசாயத்திற்கு மாறும் வகையில் அதற்கு ஆகும் முழுசெலவையும் அரசே ஏற்க வேண்டும். விவசாய நிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதற்கு தடை விதிக்கும் அவசர சட்டத்திருத்தத்தை மத்திய, மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும். அரசே மஞ்சளை கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு கட்டுபடியாகும் விலையை வழங்கி விவசாயிகளை காப்பாற்ற முன்வரவேண்டும். லோக் ஆயுக்தா சட்டத்தை தமிழகத்தில் நிறைவேற்ற வேண்டும். இயற்கை விவசாயத்தின் முக்கிய பொருட்களான பஞ்சகவ்வியா, காங்கயம், புளிக்குளம் போன்ற நாட்டு மாடுகளை பெருக்கவும், பாரம்பரிய ஜல்லிக்கட்டு விளையாட்டை மீண்டும் நடத்தவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். 3 மாதங்களுக்கு ஒருமுறை மாநில முதல்வர்கள் தலைமையிலும், 9 மாதங்களுக்கு ஒருமுறை பிரதமர் தலைமையிலும் விவசாயிகள் குறை ர்க்கும் கூட்டத்தை நடத்தி அரசின் கொள்கை முடிவுகள் குறித்து விவசாயிகளின் கருத்துக்களை கேட்டறிந்து அதற்கு தகுந்தவாறு சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். தேசிய அளவிலும், மாநில, மாவட்ட அளவிலும் நதிகளை இணைக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பெட்ரோலுக்கு

பதிலாக எத்தனாலை பயன்படுத்த மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு பொங்கலூர் மணிகண்டன் தெரிவித்தார்.

## மார்க்கெட்டுக்கு பூவன் வாழை வரத்து அதிகம்

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு நேற்று பூவன் வாழை தார் வரத்து அதிகமாக இருந்தது. இருப்பினும், அதிக கிராக்கி இருந்ததால் ஒரு பூவன்தார் ரூ.450வரை ஏலம் போனது என்று வியாபாரிகள் தெரிவித்தனர். பொள்ளாச்சி காந்தி வாரசந்தையில் புதன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடக்கிறது. சுற்றுவட்டார கிராம பகுதிகளிலில் இருந்து மட்டுமின்றி வெளி மாவட்டங்களில் இருந்தும் கொண்டுவரப்படும் வாழைத்தார்கள் குறிப்பிட்ட விலை நிர்ணயம் செய்து ஏலம் விடப்படுகிறது. இதல் நேற்று நடந்த வாழைத்தார் ஏலத்தில் ஆனைமலை, கிணத்துக்கடவு, நெகமம், உடுமலை, கணியூர் உள்ளிட்ட பல்வேறு கிராம பகுதியிலிருந்து செவ்வாழை, கர்பூரவள்ளி, ரஸ்தாளி, பூவன், நேந்திரன் உள்ளிட்ட வாழைத்தார்கள் கொண்டு வரப்பட்டிருந்தது. கடந்த சில வாரங்களைபோல் நேற்று நடந்த ஏலத்திலும், வாழைத்தார் வரத்து குறைவாக இருந்துள்ளது. ஆனால், மற்ற வாழைத்தார்களை விடவும் பூவன்தார் வரத்து வழக்கத்தைவிட அதிகளவில் இருந்தது. இருப்பினும் சுபமுகூர்த்த நாட்கள் தொடர்ந்து வர உள்ளதால் வாழைத்தாருக்கு அதிக கிராக்கி இருந்தது. இதனால் அவை கூடுதல் விலைக்கு ஏலம்போனது. செவ்வாழைத்தார் ஒன்று ரூ.350 முதல் அதிகபட்சமாக ரூ.800வரையிலும், மோரீஸ் ரூ.580க்கும், பூவன்தார் ரூ.300 முதல் ரூ.450வரையிலும், கற்பூரவள்ளி ரூ.300 முதல் ரூ.900க்கும், ரஸ்தாளி ரூ.550வரையிலும், நேந்திரன் கிலோ ரூ.23க்கும் என ஏலம்போனது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

## ஆலத்தூர் ஒன்றிய விவசாயிகளுக்கு ரொட்டவேட்டர் கருவி

பாடாலூர், : ஆலத்தூர் ஒன்றியத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு பருத்தி சாகுபடி இயக்கத்தின்கீழ் ரொட்டவேட்டர் கருவி வழங்கும் விழா நடை

பெற்றது.ஆலத்தூர் ஒன்றிய வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் அண்ணாதுரை தலைமை வகித்தார். ஒன்றியக்குழுத் தலைவர் வெண்ணிலா, துணைத் தலைவர் சாந்தி ஆகியோர் விவசாயிகளுக்கு ரொட்ட வேட்டர் கருவிகளை வழங்கினர்.நிகழ்ச்சியில் வேளாண் மைத்துறை உதவி இயக் குனர் அண்ணா துரை தெரிவித்ததாவது: பருத்தி சாகுபடி இயக்கத் தின் கீழ் ஆலத்தூர் வட்டாரத்திற்கு ரூ.20 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப் பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டில் மான்ய விலையில் ரொட்ட வேட்டர் வழங்க ரூ.6 லட்சம் ஒதுக்கீடு பெற்று 15 பயனாளிகள் தேர்வு செய்து, இந்த கருவி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தில் பருத்தியில் 75 ஹெக்டேரில் முதல்நிலை செயல்விளக்கம் அமைக்க ஹெக்டேருக்கு ரூ.7 ஆயிரம் வீதம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு அதற்கான பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. மேலும், விசைத்தெளிப்பான் 50 சதவீத மான்ய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, ஆலத்தூர் வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் தங்கள் தேவைக்கு சம்பந்தப்பட்ட வேளாண் உதவி அலுவலர்களை அணுகி பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டார். நிகழ்ச்சியில் வேளாண் மைத்துறை அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

## <u>திருச்செந்துறையில் 1,062 வாழைத்தார் ரூ.92,735க்கு ஏலம்</u>

திருச்சி, : திருச்செந்துறையில் நடந்த வாழைத்தார் பொது ஏலத்தில் 1,062 வாழைத்தார்கள் ரூ.92,735க்கு ஏலம் விடப்பட்டது. ஸ்ரீரங்கம் தாலுகா திருச்செந்துறை கிராமத்தில் வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் வாழைத்தார் பொதுஏலம் நடைபெற்றது. கிளியநல்லூர், சிறுகாம்பூர், கொப்பாவளி, ராமகிரிப்பட்டி, கடியாக்குறிச்சி, ஸ்ரீரங்கம், திருவளர்சோலை, சென்னக்கரை, முள்ளிக்கரும்பூர், குழுமணி, ஆமூர், தொட்டியம், வாத்தலை, செங்குடி, ஜீயபுரம், மேலூர், அயிலாப்பேட்டை ஆகிய கிராமங்களில் இருந்து 35 விவசாயிகள் தாங்கள் விளைவித்த வாழைத்தார்களுடன் கலந்து கொண்டனர். வியாபாரிகள் 20 பேர்

ஏலத்தில் கலந்துகொண்டு வாழைத்தார்களை ஏலம் எடுத்தனர். மொத்தம் 1,062 வாழைத்தார்கள் ரூ.92,735க்கு ஏலம் விடப்பட்டது. இந்த ஏலத்தில் பச்சலாடன்தார் ஒன்று அதிகபட்சமாக ரூ.275க்கும், பூவன் தார் ரூ.270க்கும், போயன் தார் ரூ.260க்கும், ரஸ்தாளி ரூ.250க்கும், நேந்திரன் ரூ.215க்கும், மொந்தன் ரூ.210க்கும், ஏலரசி ரூ.135க்கும் ஏலம் போனது. விவசாயிகளுக்கு எவ்வித கமிஷனுமின்றி உடனுக்குடன் பணமும் பட்டு வாடா செய்யப்பட்டது. ஒரே தார் ரூ.560க்கு ஏலம் பொதுஏலத்தில் கலந்து கொண்ட அந்தநல்லூர் அயிலாப்பேட்டை விவசாயி பிச்சை என்பவர் 2 கற்பூரவள்ளி தார்கள் கொண்டு வந்தார். இந்த தாரில் 12 சீப்புகளுடன் 52 கிலோ எடை இருந்தது. 525 பழங்களும் இருந்தது. ஒரு தார் அதிகபட்சமாக ரூ.560க்கு ஏலம் போனது குறிப்பிடத்தக்கது.

## <u>கறம்பக்குடி, ஆலங்குடி அறந்தாங்கியில் கோடை மழை</u>

அறந்தாங்கி, : கறம் பக்குடி, அறந்தாங்கி, ஆலங்குடி உள்ளிட்ட புதுக் கோட்டை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று கோடை மழை பரவலாகப் பெய்தது.தமிழகத்தில் கோடை வெயில் சுட்டெரிக்கிறது. அக்னி நட்சத்திரம் ஆரம்பிப்பதற்கு முன்பாக அன லின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த 1 வாரமாக 100 டிகிரிக்கு மேல் வெயில் கொளுத்துகிறது. இதன் காரணமாக மதிய வேளை யில் சாலை களில் மக்கள் நடமாட்டம் குறைந்தது. பகலில் அடிக்கும் வெயிலின் தாக்கம் இரவிலும் தொடர்ந்ததால் மக்கள் நிம்மதியாக தூங்க முடியாமல் பரிதவித்து வருகின்றனர். புதுக்கோட்டை மாவட்டத்திலும் கறம்பக்குடி, அன்னவாசல், இலுப்பூர், திருமயம், பொன்னமரா வதி, மணமேல்குடி உள் ளிட்ட பகுதிகளில் அனுதினமும் அதிகரித்து வரும் கோடை வெயிலின் உக்கிரத்தால் பொதுமக்கள் பெரிதும் அவதிப்பட்டனர். இதனால், குளம், ஏரி, கண்மாய்கள் உள்ளிட்ட பல் வேறு நீர்நிலைகளும் வறண்டன. குடிநீர்த் தட்டுப்பாடு இப்போதே ஏற்பட்டுள்ளது. கால்நடைகள் அனைத்தும் குடிக்கத் தண்ணீரின்றி பரிதவித்து வருகின்றன.

இந்நிலையில், கறம்பக்குடியில் நேற்று அதிகாலை 5.45 மணிக்கு திடீரென வானில் கரு மேகங்கள் திரண்டு நின்றன. அதனைத் தொடர்ந்து கோடை மழை பெய்தது. இடையிடையே குளிர்ந்த காற்றும் வீசியதால் விவசாயிகளும், பொது மக்களும் மகிழ்ச்சி அடைந்தனர். இதே போல், ஆலங் குடி மற்றும் சுற்று வட்டா ரப் பகுதிகளில் நேற்று காலை மிதமான சாரல் மழை பெய்து பூமியை குளிர்வித்தது. அறந்தாங்கி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் நேற்று (8ம் தேதி) ) அதிகாலை 5 மணியளவில் வானத்தில் மின்னல் மின்னியது. இருப்பினும் காலை 7 மணி முதல் வழக் கம் போல் வெயிலின் தாக் கம் காணப்பட்டது. பின் னர் காலை 9 மணியளவில் வானில் கருமேகங்கள் சூழ்ந்து ரம்யமான சூழலை வரவழைத்தன. இதனைத் தொடர்ந்து, காலை 9.30 மணியளவில் பெய்யத் தொடங்கிய மழை தொட ர்ந்து 1 மணி நேரம் கன மழையாக கொட்டித் தீர்த்தது.இதனால் நகரில் உள்ள பல்வேறு தாழ்வான பகுதிகளில் முதலில் மழை நீர் தேங்கி நின்றது. மேலும், இதயத்துக்கு இதமளிக்கும் வகையில் குளு குளு தென்றல் காற்றும் வீசியது. கோடை வெயிலுக்கு இடையே திடீரென பெய்த இந்த கன மழையால் பொதுமக்களும, விவசாயிகளும் பெரிதும் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால், மழை நின்ற சிறிது நேரத்தில் மழை பெய்ததற்கான அறிகுறியே இல்லாத அளவுக்கு மழை நீர் வற்றியது. இருந்த போதும் நாள் முழுவதும் மேகமூட்டத்துடன் குளிர்ந்த சூழ்நிலை நிலவியதால் வெயிலின் தாக்கத்தில் இருந்த மக்கள் சற்று விடுபட்டிருந்தனர்.இதே போல், ஆலங்குடியில் நேற்று காலை சாரல் மழை பெய்தது.

<u>**தஞ்சையில் மழை**</u>

தஞ்சை, : தஞ்சையில் நேற்று அதிகாலை ஒரு மணி நேரம் குளிர்ந்த காற்றுடன் மழை தூறியது. தமிழகத்தில் கோடை வெயில் சுட்டெரித்து வருகிறது. கடந்த ஒரு வாரமாக 100 டிகிரிக்கு மேல் வெயில் கொளுத்துகிறது. மதிய வேளைகளில் மக்கள் வெளியில் நடமாட

முடியவில்லை. பகலில் அடிக்கும் வெயிலின் தாக்கம் இரவிலும் காணப்படுகிறது. இந்நிலையில் தஞ்சையில் நேற்று அதிகாலை 5 மணிக்கு திடீரென மேகங்கள் திரண்டது. அவ்வப்போது மின்னல் வெட்டியது. இதையடுத்து திடீரென மழை தூறியது. இந் தூறல் மழை ஒரு மணி நேரம் நீடித்தது. இடையிடையே குளிர்ந்த காற்றும் வீசியது. 6 மணி வரை நீடித்த தூறல் நின்றது. பட்டுக்கோட்டையில் நேற்று அதிகாலை 4 மணி முதல் மழை தூறியது. பின்னர் காலை 9.15 மணிக்கு கனமழை பெய்தது. இதேபோல் திருவையாறு பகுதியிலும் மழை தூறியது.

**<u>மானாவாரி நிலத்தில் பருத்தி விவசாயம் வேளாண் துறையினர் ஆலோசனை</u>**

பழநி, : மானாவாரி நிலங்களில் பருத்தி விவசா யம் செய்யும் முறை குறித்து வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள் ளனர். பணப்பயிர்களில் பரு த்தி முதன்மை இடத்தில் உள்ளது. உலகளவில் பரு த்தி உற்பத்தியில் இந்தியா 2ம் இடத்தில் உள்ள போதிலும், பருத்தியின் உற்பத்தி தமிழகத்தில் குறைவாகவே உள்ளது. தமிழகத்தில் உள்ள நூற்பாலைகளுக்கு ஆண்டு ஒன்றி ற்கு சுமார் 70 லட்சம் பேல் கள் பஞ்சு தேவைப்படுகின் றன. ஆனால் தமிழகத்தில் அந்தளவிற்கு பருத்தி கிடைப்பதில்லை. இதன் காரணமாக வேளாண்துறையினர் பருத்தி உற்பத்தி யை அதிகரிக்க விவசாயி கள் பல நவீன சாகுபடி முறைகளை அறிமுகப்படுத்தி வருகின்றனர். இதுகுறித்து பழநி வேளாண்துறை அதிகாரிகள் கூறுகையில், தமிழகத்தில் குளிர்கால இறவை பருத்தி, மானாவாரி பருத்தி, இறவை பருத்தி, நெல் தரிசுப் பருத்தி என பருத்தி 4 பருவங்களில் பயிரிடப்படுகிறது. மானா வாரிப் பகுதிகளுக்கு கே 10, கே 11, கே.சி.2, கே.சி.3, எஸ்.பி.பி.ஆர் 3, எஸ்.வி.பி.ஆர் 4, எம்.சி.யு. 5, எம்.சி.யு. 12, பையூர் 1, எல்.ஆர்.ஏ.5166 ஆகிய ரகங்கள் சிறந்தவைகளாக கண்டறிப்பட்டுள்ளன. விவசாயிகள் கோ டை உழவு செய்யும்போது நிலத்தின் சரிவுக்கு குறுக் காக உழவு செய்ய வேண் டும். இதனால்

வழிந்தோடி வீணாகும் நீர் தடுக்கப் பட்டு உட்கிரகிக்கப்பட்டு விடும்.மண்ணின் உற்பத்தி திற னை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு தொழுஉரம், மக்கிய குப்பை அல்லது ஆடுமாடுகள் கிடைபோடுதல் ஆகியவற்றை முறையே செய்ய வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 12.5 டன் தொழுஉரம் இடுவ தால், மண்ணின் தன்மை கெட்டு விடாமல் பருத்தியின் விளைச்சலை அதிகமாக பெறலாம். இத னால் மண்ணின் சேமிப்புத் திறனும் அதிகரிக்கின்றது. மண் பரிசோதனையின்படி உரம் இட வேண்டும். தொடர்ந்து நூண் ணுட்ட கலவையை 12,5 கிலோவை சுமார் 40 கிலோ மணலுடன் கலந்து விதைச்சாலில் தூவ வேண்டும். மண் ஈரம் காக்கும் பொருட்டு மண் போர்வை அமைத்து பயிர் வறட்சியில் வாடுவதைத் தடுக்கலாம். பருத்தியில் அதிகப்படியான நீராவி போக் கைக் கட்டுப்படு த்த பராபின் என்ற மெழுகு பொருளை 1% என்ற அளவில் இலை களில் தெளித்து நீராவிப் போக்கைக் குறைக்கலாம்.காய்கள் நன்றாக வெடி த்து வரும்போது ஒரு வார இடைவெளியில் பருத்தி அறுவடை செய்ய வேண் டாம். காலை 11 மணிக்குள் பருத்தி அறுவடைய முடித்து விட வேண்டும். நன்கு வெடித்த பருத்தியை குவியலாகவும், பூச்சிகளி னால் சேதமடைந்த பருத்தி யை தனி குவியலாகவும் வைக்க வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு விவசாயிகள் வேளாண் அலுவலகத்தை அணுகலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## <u>சிவகங்கை மாவட்டத்தில் திடீர் மழை</u>

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் நேற்று திடீரென பகலில் பெய்த மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். சிவகங்கையில் கடந்த இரண்டு வாரங்களாக கடும் வெயில் சுட்டெரித்து வருகிறது. மே மாதம் கத்திரி வெயில் தொடங்க உள்ள நிலையில், தற்போதே வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. இதனால், பகல் நேரங்களில் பொதுமக்கள் அவதியடைந்து வந்தனர். கடந்த டிசம்பர் மாதத்திற்கு பிறகு கனமழை

இல்லாததால் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்நிலையில், நேற்று காலை முதலே மாவட்டம் முழுவதும் வெயில் இல்லாமல் வானம் மேக மூட்டமாக காணப்பட்டது. இந்நிலையில் சுமார் 11மணியளவில் காரைக்குடி, திருப்பத்தூர், தேவகோட்டை, காளையார்கோவிலை சுற்றியுள்ள புலியடிதம்மம் உள்ளிட்ட கிராமப்பகுதிகளில் பகுதிகளில் ஓரளவு கனமழை பெய்தது. சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சாரல் மழை பெய்தது. கடும் வெயில் தொடங்கிய நேரத்தில் பகலில் பெய்த மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>மூணாறு அருகே ராஜமலை பகுதியில் வரையாடுகளை பார்வையிட சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி</u>**



மூணாறு அருகே ராஜமலை பகுதியில் வரையாடுகளை பார்வையிட சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
வரையாடுகள்
கேரள மாநிலம் மூணாறு அருகே ராஜமலை சிறந்த சுற்றுலா தலமாக விளங்கி வருகிறது. இந்த பகுதியில் ஏராளமான வரையாடுகள் உள்ளன. இந்த வரையாடுகளுக்கு கடந்த பிப்ரவரி, மார்ச் மாதங்கள் பிரசவ காலம் ஆகும். எனவே இந்த காலங்களில் வரையாடுகளை பார்வையிட வனவிலங்கு பாதுகாப்புத்துறை சார்பில் தடை விதிக்கப்பட்டு இருந்தது. தற்போது பிரசவ காலம் முடிந்து விட்டதால் வரையாடுகளை சுற்றுலா பயணிகள் பார்வையிட நேற்று முதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த வரையாடுகளை பார்வையிடுவதற்காக ராஜமலை 5-ம் மைல் பகுதியில் இருந்து வனத்துறை சார்பில் வாகன வசதியும் செய்யப்பட்டுள்ளது.

கட்டணம்

வரையாடுகளை பார்வையிடுவதற்கு ரூ.75 முதல் ரூ.150 வரை கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. மேலும் கேமரா கொண்டு செல்வதற்கு தனியாக கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. வரையாடுகளை பார்வையிடுவதற்காக தமிழ்நாடு மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருவார்கள்.

**விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டியில் வழங்கப்படும் நகைக் கடன் ரத்து**

விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டியில் வழங்கப்படும் நகைக்கடன் முற்றிலும் ரத்து செய்யப்பட்டு உள்ளது. வட்டி மானியம் இந்தியாவில் உள்ள அரசு மற்றும் அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டியில் தங்க நகை அடமான கடன் வழங்கப்படுகிறது. ஓராண்டிற்குள் இந்த கடனை திரும்ப செலுத்தினால், 3 சதவீத வட்டி மானியமாக வழங்கப்படும். ஒரு லட்சம் தொகைக்குள் பெறப்படும் இந்த விவசாய நகைக்கடன்களுக்கு நிலப்பட்டா தர தேவையில்லை. ஒரு லட்சத்திற்கு மேல் வாங்கப்படும் தொகைக்கு கட்டாயம் நிலப்பட்டா தர வேண்டும். இந்த நகைக்கடன் திட்டத்தால், ஏராளமான விவசாயிகள் பயன் அடைந்து வந்தனர். குறிப்பாக விவசாயப் பணிகளை தொடங்கும் காலகட்டத்தில் நகை கடனை பெற்று விவசாய பணிகளை மேற்கொள்வார்கள். அதே போல் ஒரு லட்சத்திற்குள் பெறப்படும் நகைக்கடனுக்கு நிலப்பட்டா தேவையில்லை என்பதால் விவசாயிகளை தவிர ஏழை, நடுத்தர மக்களும் இந்த திட்டத்தின் மூலம் நகைக்கடன் பெற்று பயன் அடைந்து வந்தனர். 12.2 சதவீத வட்டி

இந்த நிலையில், இந்த நகைக்கடன் திட்டத்தை அனைத்து வங்கிகளும்

முற்றிலும் ரத்து செய்துள்ளன. அதன்படி விவசாயிகளுக்கு என்று நகைக்கடன் திட்டம் எதுவும் இனி கிடையாது. மற்றவர்களைப் போல் விவசாயிகளும் பொதுவான நகைக்கடன் பெறலாம். ஆனால் அதற்கு வட்டி 12.2 சதவீதமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வங்கிகளின் இந்த நடவடிக்கையால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர். இது குறித்து வங்கி அதிகாரி ஒருவர் கூறியதாவது:- விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டியில் வழங்கப்படும் தங்க நகை அடமான கடன் கடந்த 1-ந் தேதி முதல் முற்றிலும் ரத்து செய்யப்பட்டு உள்ளது. அவர்களுக்கு இனி மற்றவர்களை போல 12.2 சதவீத வட்டியில் தான் தங்க நகைக்கடன் வழங்கப்படும். ஏற்கனவே இந்த திட்டத்தின் கீழ் கடன் பெற்றவர்களுக்கு தங்களது ஓராண்டு காலக்கெடு வரை 7 சதவீத வட்டி தொடரும். அதன்பின் 12.2 சதவீதமாக மாற்றம் பெரும். இவ்வாறு அவர் கூறினார்.

## ஆண்டிப்பட்டி பகுதியில் கம்மங்கூழ், இளநீர் விற்பனை அதிகரிப்பு கோடை வெயில் எதிரொலி



ஆண்டிப்பட்டி பகுதியில் கோடை வெயில் எதிரொலியாக கம்மங்கூழ், இளநீர்விற்பனைஅதிகரித்துள்ளது.

வெயிலின்தாக்கம்அதிகரிப்பு

தமிழ்நாட்டில் கோடை வெயில் தொடங்கியுள்ள நிலையில் பகல் நேரங்களில் வெயில் சுட்டெரித்து வருகிறது. மலைகளால் சூழப்பட்ட தேனி மாவட்டத்திலும் வெயிலின் தாக்கம் இந்த ஆண்டு கடுமையாக உள்ளது. கத்தரி வெயில் தொடங்குவதற்கு முன்பாகவே வெயில் அளவு கணிசமாக அதிகரித்துள்ளது. தேனி மாவட்டத்திலேயே வறட்சியான

பகுதியாக காணப்படும் ஆண்டிப்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் இந்த ஆண்டு வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக ஆண்டிப்பட்டி பகுதிகளில் பகல் நேரங்களில் மக்கள் நடமாட்டம் மிகவும் குறைவாகவேகாணப்படுகிறது.

கம்மங்கூழ்விற்பனை

கடுமையான வெயில் காரணமாக பகல் நேரங்களில் உடலில் ஏற்படும் உஷ்ணத்தை கட்டுப்படுத்தும் விதமாக மக்கள் இயற்கை குளிர்பானங் களான பல்வகை பழச்சாறுகள், தர்ப்பூசணி பழங்கள், இளநீர் மற்றும் கம்மங்கூழ் போன்றவற்றை அதிகம் வாங்கி பருகி வருகின்றனர். மேலும் ஆண்டிப்பட்டி சுற்றுவட்டாரங்களில் சமீபகாலமாக சாலையோரங்களில் தற்காலிகமாக குளிர்பான கடைகளும் புதிதாக உதயமாகியுள்ளது. இந்த வழியாக வாகனங்களில் வருபவர்கள் சாலையோர கடைகளில் நின்று கம்மங்கூழ், நீர்மோர், இளநீர் ஆகியவற்றை வாங்கி பருகி வருகின்றனர். இதனால் குளிர்பானங்களின் விற்பனை கடந்த சில வாரங்களாக கணிசமாக அதிகரித்துள்ளது.

## <u>ரூ.12 கோடியில் அமைக்கப்பட்டு உள்ள திருச்சி வண்ணத்துப்பூச்சி பூங்கா சுற்றுலா தளம் அடுத்த மாதம் திறக்கப்படும்</u>



ரூ.12 கோடியில் அமைக்கப்பட்டு உள்ள திருச்சி வண்ணத்துப்பூச்சி பூங்கா சுற்றுலா தளம் அடுத்த மாதம் பொதுமக்கள் பார்ப்பதற்காக திறந்து விடப்படும் என்று சட்டப்பேரவை மனுக்கள் குழு ஆய்வில் தெரிவிக்கப்பட்டது.

<u>சட்டப்பேரவை மனுக்கள் குழு வருகை</u>

தமிழ்நாடு சட்டப்பேரவை மனுக்கள் குழுவினர் நேற்று திருச்சி வந்தனர். இந்த குழுவின் தலைவரான அரசு தலைமை கொறடா மனோகரன் தலைமையில் உறுப்பினர்கள் எம்.எல்.ஏ.க்கள் கணேசன், விஜயலட்சுமி

பழனிச்சாமி, கிட்டுசாமி, ராமசாமி, ஹரிதாஸ், பொன்னுசாமி மற்றும் சட்டமன்ற செயலாளர் ஜமாலுதீன் ஆகியோர் அடங்கிய இந்த குழுவினர் நேற்று திருச்சி ஸ்ரீரங்கம் மேலூர் அருகே மேல் அணைக்கட்டு காப்புக்காட்டில் வனத்துறை சார்பில் அமைக்கப்பட்டு உள்ள வண்ணத்துப் பூச்சி பூங்கா மற்றும் நட்சத்திர வனத்தை பார்வையிட்டனர்.

இந்த வண்ணத்துப்பூச்சி பூங்கா 25 ஏக்கர் பரப்பளவில் அமைப்பதற்காக கடந்த 2012–ம் ஆண்டு அப்போது முதல்–அமைச்சராக இருந்த ஜெயலலிதா அடிக்கல் நாட்டினார். இதற்காக ரூ.8 கோடியே 67 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பூச்சி இனங்களில் அனைவராலும் ரசிக்கப்படக்கூடியதும், தாவர மகரந்த சேர்க்கைக்கு வழி வகுப்பதுமான வண்ணத்துப்பூச்சிகள் தமிழகத்தில் சுமார் 300 வகை உள்ளன. இந்த இனங்களை அழிந்து விடாமல் பாதுகாப்பதற்கும், அவை இனவிருத்தி செய்வதற்காகவும் இந்த பூங்கா உருவாக்கப்பட்டு வருகிறது.

<u>இயற்கை வன சூழல்</u>

இந்த பூங்காவில் ஏராளமான மரங்கள் நடப்பட்டு இயற்கையான வனச்சூழல் உருவாக்கப்பட்டு இருப்பதுடன், ஊட்டி, கொடைக்கானல் போன்ற மலைப்பிரதேசங்களில் உள்ளது போன்று பல வகையாக பூத்து குலுங்கும் மலர் செடிகளும் நடப்பட்டு உள்ளன. வண்ணத்துப்பூச்சிகள் புழு நிலையில் இருக்கும்போது அவை உணவாக உண்ணக்கூடிய தாவரங்களும் நடப்பட்டு உள்ளன. பூங்காவை பார்வையிட வரும் பொதுமக்கள் அமர்ந்து ஓய்வு எடுப்பதற்காக மூங்கில் மற்றும் ஒரு வகையான புல் செடிகளால் சிறுகுடில்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

மேலும் செயற்கை குளங்கள், நீர் வீழ்ச்சிகளும் உருவாக்கப்பட்டு உள்ளன. மேலும் வான சாஸ்திரப்படி 27 நட்சத்திரங்கள் இருப்பதால் ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் உரிய மரங்கள் நடப்பட்டு நட்சத்திர வனம் 2 ஏக்கர் பரப்பளவில் தனியாக அமைக்கப்பட்டு வருகிறது.

<u>அடுத்த மாதம் திறக்கப்படும்</u>

இந்த வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் நட்சத்திர வனப்பகுதியை நேற்று சட்டப்பேரவை மனுக்கள் குழுவினர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அதன் பின்னர் குழுவின் தலைவரும், அரசு தலைமை கொறடாவுமான மனோகரன் நிருபர்களிடம் கூறுகையில் ‘சுற்றுலா துறை சார்பில் வண்ணத்துப்பூச்சி பூங்காவுக்கு கூடுதலாக ரூ.3 கோடியே 33 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது’ என்றார்.

வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் சுற்றுலா தளம் கட்டுமான பணிகள் அனைத்தும் விரைவாக முடிவடைந்து அடுத்த மாதம்(மே) பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து விடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து சட்டப்பேரவை மனுக்கள் குழுவினர் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு செய்யப்பட்டுள்ள நவீன மருத்துவ சிகிச்சை வசதிகளை ஆய்வு செய்தனர்.

<u>35 மனுக்களுக்கு பதில்</u>

அதன் பின்னர் திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் சட்டப்பேரவை மனுக்கள் குழுவினர் ஏற்கனவே பெறப்பட்ட மனுக்களுக்கு பதில் அளிக்கும் ஆய்வு நிகழ்ச்சி நடந்தது. இதில் திருச்சி மாவட்ட கலெக்டர் பழனிச்சாமி, மேயர் ஜெயா, வளர்மதி எம்.எல்.ஏ, துணைமேயர் சீனிவாசன், மாவட்ட வருவாய் அதிகாரி தர்ப்பகராஜ், பொதுப்பணித்துறை மேற்பார்வை பொறியாளர் ரபீந்தர், மாவட்ட வன அதிகாரி சதீஷ் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் 35 மனுதாரர்கள் வரவழைக்கப்பட்டு அவர்கள் கொடுத்த மனுக்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி பதில் தெரிவிக்கப்பட்டது. 65 பேரின் மனுக்கள் மீது மறு ஆய்வு செய்யப்பட்டது.